


வடக்கு மண்டலம், வேலூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட, 3 சட்டமன்றத் தொகுதிகளின் தேர்தல் பார்வையாளர்கள், பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்–2, தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோர்களுக்கு வடக்கு மண்டல பொறுப்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வவேலு அவர்கள் வாக்காளர்கள் சிறப்பு திருத்தம் குறித்து ஆலோசனைகள் வழங்கினார். உடன் அவைத் தலைவர் முகமது சஹி, வேலூர் தெற்கு, வடக்கு மாவட்டப் பொறுப்பாளர்கள் ஏ.பி.நந்தகுமார், டி.எம்.கதிர்ஆனந்த், எம்.பி சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன், அமுல் விஜயன் உட்பட கழக தோழர்கள் பலர் உள்ளனர்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில்

# நவ.11-ல் கோட்டை மைதானத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## சேலம் மாவட்ட தி.மு.க. வேண்டுகோள்!

சேலம், நவ.8-

சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தை கண்டித்து 'மத சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் 11-11-2025 செவ்வாய்க் கிழமை அன்று காலை 10.00 மணிக்கு, சேலம் கோட்டை மைதானத்தில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. தலைமையில், சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. மற்றும் கூட்டணிக் கட்சிகளின் மாவட்டத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

எனவே இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' கட்சிகளின் மாவட்ட, மாநகர தலைவர்கள், செயலாளர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர பகுதி, வட்ட, ஒன்றிய, ஊராட்சி கிளை செயலாளர்கள், பொது மக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்ப வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு சேலம் மாவட்ட தி.மு.க. சார்பில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

# சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணிக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட தலைவர்கள் - செயலாளர்கள் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தைக் (SIR) கண்டித்து வரும் (11.11.2025 - செவ்வாய்க்கிழமை) மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம் நாளை (09.11.2025 - ஞாயிற்றுக்கிழமை) பகல் 12 மணியளவில், சைதை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

எனவே இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள் - ஒன்றிய கழக செயலாளர்கள், தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட தலைவர்கள் - மாவட்ட செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்றிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த உதவி மையம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் ஈடுபடும் கழகத்தினருக்கு எழும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு உதவிடும் வகையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் தலைமைக் கழகம் மூலம் ஒருங்கிணைத்திட கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் **என். ஆர். இளங்கோ எம்.பி.**, மேற்பார்வையில் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

கழக நிர்வாகிகள் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான சந்தேகங்களை 08065420020 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கான பதில்களை பெற்று முறையாக பணிகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| மண்டலம் | மாவட்டம் | பெயர் | தொடர்பு எண் |
|---|---|---|---|
| தெற்கு | கன்னியாகுமரி கிழக்கு<br>கன்னியாகுமரி மேற்கு<br>திருநெல்வேலி கிழக்கு<br>திருநெல்வேலி மத்திய<br>திருநெல்வேலி மேற்கு<br>தூத்துக்குடி தெற்கு<br>தூத்துக்குடி வடக்கு<br>தென்காசி தெற்கு<br>தென்காசி வடக்கு | வழக்கறிஞர்<br>கே.எஸ்,ரவிச்சந்திரன் | 9840022250 |
| வடக்கு | இராணிப்பேட்டை<br>கள்ளக்குறிச்சி தெற்கு<br>கள்ளக்குறிச்சி வடக்கு<br>சேலம் கிழக்கு<br>சேலம் மத்திய<br>சேலம் மேற்கு<br>தர்மபுரி கிழக்கு<br>தர்மபுரி மேற்கு<br>திருப்பத்தூர்<br>திருவண்ணாமலை தெற்கு<br>திருவண்ணாமலை வடக்கு<br>வேலூர் வடக்கு<br>வேலூர் தெற்கு | வழக்கறிஞர்<br>ஜெ.பச்சையப்பன் | 9840260178 |
| மதுரை | சிவகங்கை<br>மதுரை தெற்கு<br>மதுரைமாநகர்<br>மதுரை வடக்கு<br>தேனி வடக்கு<br>தேனி தெற்கு<br>இராமநாதபுரம்<br>விருதுநகர் தெற்கு<br>விருதுநகர் வடக்கு | வழக்கறிஞர்<br>பாலாஜி | 9710582658 |
| சென்னை | காஞ்சிபுரம் வடக்கு<br>சென்னை கிழக்கு<br>சென்னை தெற்கு<br>சென்னைதென் மேற்கு<br>சென்னை மேற்கு<br>சென்னைவட கிழக்கு<br>சென்னை வடக்கு<br>திருவள்ளூர் கிழக்கு<br>திருவள்ளூர் மத்திய<br>திருவள்ளூர் மேற்கு | வழக்கறிஞர்<br>நந்தகோபால் | 9884153737 |
| டெல்டா | அரியலூர்<br>கடலூர் மேற்கு<br>தஞ்சாவூர் தெற்கு<br>தஞ்சாவூர் மத்திய<br>தஞ்சாவூர் வடக்கு<br>திருச்சிராப்பள்ளி தெற்கு<br>திருச்சிராப்பள்ளி மத்திய<br>திருச்சிராப்பள்ளி வடக்கு<br>புதுக்கோட்டை வடக்கு<br>புதுக்கோட்டை தெற்கு<br>திருவாரூர்<br>நாகை<br>பெரம்பலூர்<br>மயிலாடுதுறை | வழக்கறிஞர் பெ.ரகு | 9444413889 |
| விழுப்புரம் | கடலூர் கிழக்கு<br>காஞ்சிபுரம் தெற்கு<br>விழுப்புரம் தெற்கு<br>விழுப்புரம் மத்திய<br>விழுப்புரம் வடக்கு | வழக்கறிஞர்<br>சந்திரபோஸ் | 9841364135 |
| கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி கிழக்கு<br>கிருஷ்ணகிரி மேற்கு<br>திண்டுக்கல் கிழக்கு<br>திண்டுக்கல் மேற்கு<br>திருப்பூர் கிழக்கு<br>திருப்பூர் தெற்கு | வழக்கறிஞர்<br>என்.மருது கணேஷ் | 9840034950 |
| மேற்கு | ஈரோடு தெற்கு<br>ஈரோடு மத்திய<br>ஈரோடு வடக்கு<br>கரூர்<br>கோயம்புத்தூர் தெற்கு<br>கோயம்புத்தூர்மாநகர்<br>கோயம்புத்தூர் வடக்கு<br>திருப்பூர் மத்திய<br>திருப்பூர் வடக்கு<br>நீலகிரி<br>நாமக்கல் கிழக்கு<br>நாமக்கல் மேற்கு | வழக்கறிஞர் சசிதரன் | 9952084065 |

ஒருங்கிணைப்பு பணிக்கு உதவிட :
**அழகிரி சதாசிவம்,** (9841950707)
(மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்)
**வே. கௌதமன்,** (9940923535)
(மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்)

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை -18
நாள்- 07.11.2025

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**